**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**
**SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**CC No.310/2018**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | Dr. Rajajothi | Prosecution | P.W- 1 . LW-1 |
| Husband Name | S. Thirumurugan | Defence | |
| Village | Chidambaram | Taluk | |
| Calling | | Religion | |
| Age | 37 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day **05.01.2023.**

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து சிதம்பரதம் அரசு மருத்துவமனையில் மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 06.2.2018 ஆம் தேதி இரவு 7.30 மணியளவில் நல்லூர் அரசு ஆரம்ப சுகாதர நிலையத்தில் நான் இரவு பணியில் இருந்தபோது ஆனந்தன் என்பவர் தனக்கு தெரிந்த ஒரு நபரை பழைய காயத்திற்கு காலில் கட்டு போடுவதற்காக அழைத்து வந்திருந்தார். அதே சமயத்தில் மற்றொறு 60 வயது மதிக்கத்தக்க நபர் விசம் அருந்தி சிகிச்சைக்காக வந்திருந்தார். நான் அவருக்கு அவசர சிசிச்சை அளித்துக்கொண்டிருந்தேன். அப்போது ஆஜர் எதிரி அழைத்து வந்த நபருக்கு கட்டு போடும்படி கூறினார். விஷம் அருந்தியவருக்கு சிகிச்சை அளிக்க வேண்டியுள்ளதாலும் ஆஜர் எதிரி அழைத்து வந்த நபர் காலில் போட்டிருந்த கட்டு நீட்டாக இருந்ததால் கட்டு போட தேவையில்லை என்று கூறி மருந்து வாங்கி செல்லுமாறும் தேவை ஏற்பட்டால் மறுநாள் காலையில் கட்டுபோடும்படி கூறினேன். அப்போதே ஆஜர் எதிரி கட்டுபோட வேண்டும் என்றும் அதற்குத்தானே நான் வேலை பார்க்கிறேன் என்றும் உங்களை எங்கே சொன்னால் நீங்கள் வேலை பார்ப்பீர்கள் என்று எனக்கு தெரியும் என் கத்தி கூச்சலிட்டார். சத்தம் கேட்டு என்னுடன் பணிபுரிந்த சுகந்தி வந்து ஆஜர் எதிரி அழைத்து வந்த நபருக்கு கட்டுபோட்டு அனுப்பிவைத்தார். ஆஜர்

எதிரி சென்றுவிட்டார். பின்பு அன்றைய தினமே இரவு 11.30 மணியளவில் குடித்துவிட்டு மீண்டும் மருத்துவமனைக்கு வந்து வாயில் சொல்லமுடியாத கெட்ட வார்த்தைகளால்திட்டி அசிங்கமாக பேசி என்னை கொல்லாமல் விட மாட்டேன் என்று மிரட்டினார். இதனால் நான் பணியில் மிகுந்த மன உலைச்சல் அடைந்திருந்தேன் என்னுடன் பணிபுரிந்த சுகந்தி தான் பார்த்துக்கொள்வதாக என்னிடம் கூறி என்னை அனுப்பிவைத்தார். என் அறையிலிருந்து நான் ஓபி அறையை பார்த்தபோது ஆஜர் எதிரி சுகந்தியையும் கழுத்தை நெறிப்பதுபோல்அருகே சென்று மிரட்டிக்கொண்டிருந்தார். மேற்படி சம்பவம் குறித்து நான் ஆணைக்காரன் சத்திரம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். நீதிமன்றத்தில்காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான் அந்த புகார் மனுவில் உள்ள விபரம் எனக்கு தெரியும் அந்த புகார் மனு **அ.சா.ஆ.1 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

06.02.2018 ஆம் தேதி இரவு 7.30 மணிக்கு சம்பவம் நடந்தது. எனது வட்டார மருத்துவ அலுவலர் கொடுத்த வருகை பதிவேட்டில் இரவு 8 மணி முதல் காலை 8 மணிவரை எனது பணி நேரம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆஜர் எதிரி அழைத்து வந்த நபருக்கு ஓபி சீட்டு போட்டு கொடுத்தோமா என்றால் பெயர் பதிவு செய்து சிகிச்சை செய்தோம். நான் கொடுத்த புகாரில் ஆஜர் எதிரி அழைத்து வந்த நபரின் பெயர் தமிழ்தாசன் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். இரண்டு மணி நேரம் எதிரி கூச்சலிட்டபோது ஏன் நான் காவல்நிலையத்திற்கு தகவல் தெரிவிக்கவில்லை என்றால் வட்டார மருத்துவ அலுவலருக்கு(BMO) தகவல் தெரிவித்தேன். அடிக்கடி இரவு நேர பணியின்போது யாரேனும் இருவர் கூச்சலிடத்தான் செய்வார்கள். வருகைப்பதிவேட்டில் 8 மணி என்று குறிப்பிட்டுள்ள நிலையில் நான் ஏன் முன்னதாக பணிக்கு வந்தேன் என்றால் பகல் பணிசெய்த மருத்துவர் 1 மணி நேரம் முன் அனுமதி பெற்று சென்றதால் நான் சம்பவத்தன்று இரவு 7 மணிக்கு பணிக்கு செல்ல வேண்டியிருந்தது. விக்னேஷ்வரன் மருத்துவர் பணியில் இருந்தாரா என்றால் அதுப்பற்றிய விபரம் எனக்கு தெரியாது. இரவு 11.30 மணிக்கு யார் யார் வந்து பிரச்சனை செய்தார்கள் என்றால் ஆஜர் எதிரியும் தமிழ்தாசனும்தான் வந்தார்கள்.

தமிழ்தாசன் எதுவும் பேசவில்லை ஆஜர் எதிரி மட்டும்தான் பிரச்சனை செய்ததால் அவர்மீது மட்டும் புகார் கொடுத்தேன். சம்பவத்திற்கு மறுநாள் காலை 9 மணியிலிருந்து 10 மணிக்குள் புகார் கொடுத்திருப்பேன். நான் புகார் கொடுத்தபோது என்னுடன் BMO மற்றும் சுகந்தி ஆகிய இருவரும் வந்தார்கள். நான் புகார் கொடுத்த அன்றைய தினமே காவல் அதிகாரி வந்து மருத்துவமனையில் விசாரித்தார். எதிரி, தமிழ்தாசன் ஆகியோர் பெயர் மற்றும் ஊர் விபரம் எனக்கு எப்படி தெரிந்தது என்றால் என்னுடன் பணிபுரிந்த அலுவலர் மேற்படி விபரத்தை கூறினார். மேலும் நாங்கள் மருத்துவமனை பதிவேட்டிலும் மருத்துவ சிகிச்சைக்கு வந்திருந்தவரின் பெயர் ஊர் பற்றிய விபரம் பதிவு செய்திருந்ததை பார்த்துதான் தெரிந்து கொண்டேன். ஓபி பதிவேட்டில் மருத்துவமனைக்கு வருபவரின் முழு விபரம் தெரிந்துகொண்டு பதிவு செய்வோம் என்றால் சரிதான். சுகந்தியை கழுத்தை நெறித்த நிலையில் அவர் புகார் கொடுக்காமல் நான் ஏன் புகார் கொடுத்தேன் என்றால் அவரும் என்னுடன் வந்திருந்தார் என்னை அசிங்கமாக ஆஜர் எதிரி பேசியதால் நான் புகார் கொடுத்தேன். சம்பவ நடந்த அன்றைய தினம் நான் மருத்துவனையில் பணியில் இல்லை என்றால் சரியல்ல. செவிலியர் மட்டுமே பணியில் இருந்தார் என்றால் சரியல்ல. நான் பணியில்தான் இருந்தேன். நான் பணிபுரிந்த மருத்துவமனை இருந்த இடத்தை மருத்துவமனை கட்டுவதற்காக யார் கொடுத்தார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எதிரி அழைத்த வந்த நபர் கொடுங்கயாத்துடன்தான் வந்தார் என்றால் சரியல்ல. அவர் தாழ்த்தப்பட்டவர் என்பதால் நான் புகார் அளிக்கவில்லை என்பதாலும் அதனால்தான் என்னுடைய புகாரில் அவருடைய பெயரை சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. அவர் புதிய காயத்துடன் சிகிச்சைக்கு வரவில்லை என்பதால்தாலும்அவர் பழைய காயத்திற்கு போட்டிருந்த கட்டு போதுமானதாக இருந்ததாலும்தான் நான் கட்டுபோடவில்லை மருந்து கொடுத்து அனுப்பினேன். எங்களது மருத்துவமனையில் போதுமான மருத்துவர் இல்லாததாலும் மருத்துவ இடம் கட்ட இடம் கொடுத்தவர் ஆஜர் எதிரியின் தாத்தா என்பதால் அந்த உரிமையில் கேட்டதற்கு நான் பொய்யாக எதிரிக்கு எதிராக புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. விக்னேஷ்வரன், ஆனந்தராஜ் என்ற மருத்துவர்கள் பணியில் இல்லை. மருத்துவர்கள் மருத்துவ பணியாளர்கள் எத்தனை மணிக்கு பணிக்கு

வரவேண்டும் எத்தனை மணிக்கு பணிமுடித்து செல்லவேண்டும் என்ற வரைமுறை உண்டு என்றால் சரிதான். ஆஜர் எதிரி எந்த ஊரை சேர்ந்தவர் என்ற விபரம் சம்பவத்தின்போது தெரியாது அதன் பின்னிட்டு விசாரித்து தெரிந்துக்கொண்டேன். நான் சொல்வதுபோல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றாலும் எதிரிக்கு எதிராக பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றாலும் சரியல்ல. உண்மையில் சம்பவம் நடந்திருந்தால் சம்பவ இடத்திலேயே எதிரியை கைது செய்திருப்பார்கள் என்றால் அன்றைய தினம் உயர் அதிகாரிக்குதான் தகவல் தெரிவித்தேன் மறுநாள் புகார் அளித்தேன். பணிபுரியும்இடத்தில் பிரச்சனை நடந்தால் உயர்அதிகாரிக்கு தகவல் தெரிவித்துதான புகார் அளிப்பேன் என்றால் சரிதான். நான் புகார் மட்டும் தான் கொடுத்தேன் போனில் எந்த தகவலும் காவல் நிலையத்திற்கு சொல்லவில்லை. ஆஜர் எதிரியை கைது செய்ய நான் எனது செல்வாக்கை பயன்படுத்தினேனா என்றால் இல்லை. சம்பவம் சம்மந்தமாக போலிசார் என்னை புகார் கொடுத்த அன்றைய தினம் விசாரித்தார்கள் பின்னிட்டு போனில் விசாரித்தார்கள்.

# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## CC No.310/2018

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | Suganti | Prosecution | P.W- 2 . LW-2 |
| Husband Name | Elaravasan | Defence | |
| Village | Aachalpuram | Taluk | |
| Calling | | Religion | |
| Age | 43 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day **05.01.2023.**

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து நான் நல்லூர் ஆரம்ப சுகாதார மருத்துவனையில் செவிலியராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 06.2.2018 ஆம் தேதி இரவு 7.30 மணியளவில் நல்லூர் அரசு ஆரம்ப சுகாதர நிலையத்தில் நான் இரவு பணியில் இருந்தபோது ஆஜர் எதிரி தமிழ்தாசன் என்பவரை அழைத்துக்கு கொண்டு சிசிச்சைக்காக அழைத்து வந்தார். ஆஜர் எதிரி தமிழ்தாசனுக்கு கட்டு கட்டவேண்டும் என்று கூறினார். அப்போது விஷம் அருந்திவிட்டு அவசர சிகிச்சைக்காக வந்திருந்தவருக்கு சிகிச்சை அளித்துக் கொண்டிருந்தார் அப்போது தமிழ்தாசன் காயத்தின் கட்டையும் கழட்டி காட்ட சொன்னார் பழைய காயத்திற்கு புதிதாக கட்டுபோட்டிருந்ததால் கட்டுபோட தேவையில்லை என்று கூறி மருத்து மட்டும் கொடுத்து அனுப்ப சொன்னார். அதற்கு ஆஜர் எதிரி கட்டு கட்டும் இடத்தில் இருந்த குப்பை தொட்டியை காலில் எட்டி உதைத்து கெட்ட வார்த்தை சொல்லி இங்கெல்லாம் வரக்கூடாதுடா என்று திட்டிக்கொண்டே சென்றார் உடனே அ.சா.1 கண் கலங்கி அழுதுக்கொண்டிருந்தார். ஆஜர் எதிரி மீண்டும் 11.30 மணியளவில் மருத்துவமனைக்கு வந்து குச்சிக்காரி தேவடியா மகளே என்று திட்டி யாரெல்லாம் மருத்துவம் பார்க்க மாட்டேன் என்று சொன்னீர்களோ அவளுகள் எல்லாம் வாங்கடி என்று திட்டினார் நான் தடுத்ததற்கு

என்னை கையை வைத்து கழுத்தை நெறிக்கவந்தார். நாங்கள் இருவரும் பெண்களாக இருந்து ஆஜர் எதிரியிடம் மாட்டிக் கொண்டதால் சிசிச்சையில் இருந்தவர்களும் கூறினார்கள். நான் உங்களை காலி செய்துவிவேன் என்றும் அருவாளை எடுத்து வந்து வெட்டிவிடுவேன் என்றும் போலிஸ் இப்போதே இங்கு வரவேண்டும் என்றும் கூச்சலிட்டுக்கொண்டிருந்தார். நாங்கள் மீண்டும் பணிக்கு சென்றுவிட்டோம். மேற்படி சம்பவம் தொடர்பாக மறுநாள் காலையில் அ.சா.1 காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் நான் உடன் சென்றேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

சம்பவம் நடந்தது 06.02.2018 ஆம் தேதி இரவு 7.30 மணி இருக்கும். எனது போலிஸ் வாக்குமூலத்தில் நானும் அ.சா.1, மருத்துவர்கள் விக்னேஷ்வரன், ஆனந்தராஜ் ஆகியோர் பணியில் இருந்தார்கள் என்றால் சரிதான். பணி மருத்துவர் அல்ல மீட்டிங்காக வந்திருந்தார்கள். என்னை போன்ற பணியாளர்களுக்கு பணியாளர் பற்றாக்குறை என்பதால் நான் மட்டுமே பணி செய்வதாலும் எல்லா நேரத்திலும் நான் பணியில் இருப்பேன். எதிரியுடன் வந்தவரை நான் அடிக்கடி பார்த்துள்ளேனா என்றால் பார்த்திருப்பேன் அவர் எந்த சமுதாயத்தை சேர்ந்தவர் என்பது தெரியுமா என்றால் தெரியாது. என்னிடம் தான் முதலில் பேசிக்கொண்டிருந்தார் அதன் பின்னிட்டுதான் அ.சா.1 வந்தார். ஆஜர் எதிரி என்னிடம் கட்டு போடசொல்லவில்லை. ஆஜர் எதிரி அழைத்து வந்த நபருக்கு நான்தான் மருந்துகொடுத்தேன் 10 நாள் காயம் என்பதால் கட்டுபோடவில்லை. தமிழ்தாசனுடன் ஆனந்தன் மட்டும்தான் வந்திருந்தார். தமிழ்தாசன் என்பவர் பெயர் தமிழ்வானன் என்றால் அது பற்றிய விபரம் எனக்கு தெரியாது. போலிஸ் விசாரணையில் நான் தமிழ்அரசன் என்று கூறியுள்ளேன்என்றால் தமிழ்தாசன் என்று கூறினேன் . தமிழ்தாசனின்மனைவி பெயர் அஞ்சம்மாள். ஆனந்த் எத்தனை மணிக்கு வந்து தகராறு செய்தார் என்றால் ஆனந்த் இரவு 11.30 மணிக்கு வந்து தகராறு செய்தார். இரவு 11.30 மணிக்குதான் ஆனந்த் வந்து பிரச்சனை செய்தார் என்றால் சரிதான். இரவு 11.30 மணிக்கு ஆனந்த் மட்டும்தான் வந்திருந்தார். இரவு 11.30 மணிக்கு நானும் அ.சா.1 மட்டும்தான் பணியில்இருந்தோம். ஆனந்த் வந்து எங்களிடம் என்ன பிரச்சசை செய்தார் என்றால் யார் எல்லாம் சிகிச்சை அளிக்க மட்டேன் என்று

சொன்னீர்களோ அவளுங்கள் எல்லாம் வங்கடி என்று கெட்ட வார்த்தை கூறினார். நான் காவல் நிலையத்தில் புகார் அளித்தேனா என்றால் உடனடியாக கூறவில்லை பின்னிட்டு கூறினோம். போலிசார் எங்கள் மருத்துவமனைக்கு வெளியில் வந்து விசாரித்து சென்றுவிட்டார்கள் உள்ளே வரவில்லை. ஆஜர் எதிரி அழைத்த வந்த நபருக்கு காலில் ரத்தம்பேவதாகவும் உடநடியா கட்டுபோடவேண்டும் என்று என்னிடம் கூறினார் என்றாலும் அதற்கு நான் மருத்துவர் இல்லை என்று பதில் கூறினேன் என்றால் சரியல்ல. அ.சா.1 பணியில் இருந்தார். ஆஜர் எதிரியும் உடன் வந்த நபரும்முதலில் சிசிச்சை பெற்று சென்றுவிட்ட பின்னிட்டு மீண்டும் ஆஜர் எதிரி மட்டும் வந்து மருத்துவமனையில் பிரச்சனை செய்தார் என்றால் சரிதான். எங்களை ஆஜர் எதிரி காமகுரோதமாக திட்டி சென்றார் என்றால் சரிதான். தமிழ்தாசன் தாழ்த்தப்பட்ட வகுப்பை சேர்ந்தவர் என்பதால் மருத்துவ சிகிச்சை அளிக்க இயலாது மறுநாள் மருத்துவர் வந்த பின்னிட்டு வா என்று கூறி அனுப்பினேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரி அழைத்து வந்த நபருக்கு சிகிச்சை அளிக்க இரண்டு மூன்று மருத்துவர்கள் பணியில் இருந்தார்கள் அதனால் நான் அவ்வாறு கூறிவில்லை. தமிழ்தாசனை சிகிச்சைக்காக வந்தபோது நான் செல்போனில் முகநூல் பார்த்துக்கொண்டிருந்தேன் என்றால் சரியல்ல. தமிழ்தாசனுக்கு எதிராக நான் போலிசில் புகார் கொடுத்தேனா என்றால் அவர் பேசவில்லை. ஆஜர் எதிரியை பிரபல ரவுடி பெயரை கூறி நான் மிரட்டினேன் என்றால் சரியல்ல. தமிழ்தாசனை வழக்கில் சேர்க்காததற்கு காரனம் அவர் சமூகம்தான் காரனம் சமூகத்தால் எனக்கு பிரச்சனை வரும் என்பதால்தான் நான் அவர் பெயரை இந்த வழக்கில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. தமிழ்தாசனுக்கு சம்பவம் பற்றி தெரியும் என்று விசாரனையில் கூறினேனா என்றால் கட்டுபோட அழைத்து வந்ததாக கூறினேன். அ.சா.1 மற்றும் நான் மட்டுமே பணியில் இருந்தோம் வருகைபதிவேட்டில் உள்ள வேறு யாரும் பணியில் இல்லை. வழக்கு சம்மந்தமாக புகார் கொடுத்த மறுநாள் விசாரித்தார்கள். சம்பவத்தன்று கேட்டுக்கு வெளியே வைத்தும் போலிசார் விசாரித்து சென்றார்கள். அதன் பின்னிட்டு போலிசார் விசாரிக்கவில்லை. நான் சொல்வதுபோல் சம்பவம் நடக்கவில்லை என்றாலும் யாரோ ஒருவர் தூண்டுதளின் பேரில் எதிரிக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த

அன்று ஆண் மருத்துவர்கள் இருந்தார்கள் என்றால் 7.30 மணிக்கு இருந்தார்கள் 8 மணிக்கு கிலம்பிவிட்டார்கள். இரவு 11.30 மணிக்குதான் ஆண் மருத்துவர்கள் பணியில் இல்லை. புகார் கொடுக்க ஆண் மருத்துவர்கள் இருந்தும் அ.சா.1 புகார் கொடுத்தால்தான் ஆஜர் எதிரியை கைது செய்வார்கள் என்று சொன்னால் சரியல்ல.